DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 518/2024

Miscellaneous :

Sessions : PW 8

Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | சத்தியவாணி |
| Father / Husband Name | ஜெகதீசன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **01.07.2025**

**முதல் விசாரணை:**

1.) நான் தற்போது செங்கல்பட்டு மாவட்ட குற்ற பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.02.2022 ம் தேதி படாளம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது விஷ்ணு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண் 78/2022 இதச பிரிவுகள் **279 304A** ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

2.) பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராமன் மற்றும் தியாகராஜன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(அந்த பார்வை மகசர் அசாஆ 5 ஆகவும் மாதிரி வரைபடம் அசாஆ 6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் வழக்கில் இறந்துபோன டில்லி பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து அறிக்கை தயார் செய்தேன். **(அந்த பிரேத விசாரணை அறிக்கை அசா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 8 வரையிலான சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இறந்துபோன டில்லி என்பவரின் பிரேதத்தை பரிசோதனை செய்த மருத்துவர் சுரேஷ்குமார் என்பவரை விசாரணை செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். **(அந்த பிரேத பரிசோதனை அறிக்கை அசாஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** எதிரியை தேடி வந்த நிலையில் 28.04.2022 ம் தேதி நிலையத்தில் ஆஜரான எதிரியை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்தேன்.

4. பின்னர் விபத்தில் பங்கெடுத்த வாகனங்களான TN 21 M 6799 என்ற இருசக்கர வாகனம் மற்றும் TN 11 A 4115 என்ற இருசக்கர வாகனத்தையும் ஆய்விற்காக அனுப்பிவைத்தேன். மோட்டார் வாகன ஆய்வாளர் ஆனந்தன் என்பவரை விசாரணை செய்து அவர் அளித்த மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்று தாக்கல்

செய்தேன். (**அந்த வாகனங்களுக்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் அசாஆ 9 மற்றும் அசாஆ 10 ஆகவும் குறியீடு செய்யப்படுகிது)**. பின்னர் விசாரணையை முடித்து இதச பிரிவுகள் 279 304 ஏ ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். விசாரணை செய்ய முன் வராததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.**